# இலவச யோகா பயிற்சி 2,500 பேர் பங்கேற்பு

**சென்னை, ஜூன் 25–**

மெட்ரோ ரயில் நிலையங்களில், 2,500 பேருக்கு யோகா பயிற்சி அளிக்கப்பட்டது.

சென்னையில், விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

சர்வதேச யோகா தினத்தையொடி, கடந்த, 20ம் தேதியில் இருந்து, நேற்று முன்தினம் இரவு வரை, இப்பாதையில் உள்ள, சென்ட்ரல், சைதாப்பேட்டை, திருமங்கலம், எழும்பூர், மண்ணடி, பரங்கிமலை, வடபழனி மற்றும் அசோக் நகர் நிலையங்களில், பயணியர் மற்றும் பொதுமக்களுக்கு, இலவச யோகா தியான பயிற்சி அளிக்கப்பட்டது.

காலை, மாலை என, இரு வேளைகளில் நடந்த, நான்கு நாள் பயிற்சியில், 2,500 பேர் பங்கேற்று, பயிற்சி பெற்றனர்.



■ வடபழனி, மெட்ரோ ரயில் நிலையத்தில் நடந்த யோகா பயிற்சி.